# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

புள்ளிவிபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

**தயாரிப்பு நடவடிக்கைகள் 2019 பெப்புரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 2019 மார்ச் மாதத்தில் வேகமடைந்திருந்தது.** தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 46–மாதம் உயர்வுத்தன்மையை அடைந்திருந்ததுடன் தயாரிப்பு நடவடிக்கைகளில் ஓர் எழுச்சியையும் சமிக்ஞைப்படுத்தியிருந்தது. பருவகால கேள்விகளுக்கு இணங்கிச்செல்லும் வகையில் குறிப்பாக உணவு மற்றும் குடிபானங்கள் தயாரிப்பு தொடர்பில் அதிகரித்த புதிய கட்டளைகளினால் மார்ச் மாதத்தில் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அதிகரித்திருந்தது.

| மாறி | பெப். | மார்ச் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **50.6** | **66.9** | **+** | **அதிகரிப்பு, உயர்ந்தளவான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய கட்டளைகள் | 48.5 | 75.8 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |
| உற்பத்தி | 48.0 | 74.2 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிப்பு |
| தொழில்நிலை | 53.0 | 57.1 | + | அதிகரிப்பு, உயர்ந்தளவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 54.0 | 64.6 | + | அதிகரிப்பு, உயர்ந்தளவான வீதத்தில் |
| நிரம்பளாலர்களின் விநியோகிக்கும் நேரம் | 53.5 | 51.5 | - | நீட்சி, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி


ஏப்பிரல் மாதத்தின் புதுவருட விடுமுறைகளின் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மட்டங்களை அடைந்துகொள்ளும் நோக்கில் உற்பத்தியும் கணிசமானளவில் அதிகரித்திருந்தது. இறுக்கமான உற்பத்தி அட்டவணைகளுக்கு ஏற்றவகையில் மாதகாலப்பகுதியில் கொள்வனவுகளின் இருப்பு மற்றும் தொழில்நிலை என்பனவும் அதிகரித்திருந்தன. குறிப்பாக புடவைகள் மற்றும் ஆடைகள் துறையிலுள்ள பெருமளவான பதிலளிப்பாளர்கள் முன்னோக்கிய பண்டிகை விடுமுறைகளின் கட்டளைகளை சரியான நேரத்தில் பூர்த்தி செய்யும் நோக்கில் மேலதிக நேர வேலையினை மேற்கொள்ளவேண்டியமையை குறித்துக்காட்டியிருந்தனர். மேலும், நிரம்பலாளர்களின் விநியோக நேரங்களின் விரிவாக்கமும் ஒட்டுமொத்த அதிகரிப்பிற்கு சாதகமாக பங்களித்திருந்தது.

கொ.மு.சுட்டெண்ணின் அனைத்து துணைச்சுட்டெண்களும் நடுநிலையான 50.0 இற்கு மேலான பெறுமதியை பதிவு செய்திருந்ததுடன் 2019 பெப்புரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 2019 மார்ச் மாதத்தில் தயாரிப்பு நடவடிக்கைகளில் ஒட்டுமொத்தமானதொரு விரிவாக்கத்தை சமிக்ஞைப்படுத்தியிருந்தது.

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**66.9**

2019 பெப்புரவரியுடன் ஒப்பிடுகையில் 16.3 சுட்டெண் புள்ளிகளால் அதிகரித்திருந்தது

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலக தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலக தயாரிப்பு கொ.மு.சு 2019 மார்ச் மாதத்தில் 50.6 பெறுமதியினை பதிவு செய்ததுடன் 2019 பெப்புரவரியிலிருந்து மாற்றமடையாது காணப்பட்டது.

ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய வலயம் மற்றும் இந்தியா என்பவற்றின் தயாரிப்பு கொ.மு.சு மார்ச் மாதத்தில் 2019இல் மெதுவடைந்திருந்துடன் ஐக்கிய இராச்சியம், சீனா, சிங்கப்பூர் மற்றும் ரஷ்யா என்பவற்றின் தயாரிப்பு கொ.மு.சு அதிகரித்திருந்தது.

*மூலம்: மார்க்கிட்[1], ஏப்பிரல் 12, 2019 இல் உள்ளபடியான*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குனராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் ஐரோப்பிய வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**பணிகள் துறையானது 2019 மார்ச் மாதத்தில் உயர்ந்தளவான வேகத்தில் விரிவாக்கமடைந்ததுடன்** 2019 பெப்புரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இது புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கைகள் மற்றும் தொழில்நிலை என்பவற்றின் வேகமான விரிவாக்கத்தினால் ஏற்பட்டிருந்தது. வியாபார நடவடிக்கைகளின் துணைச்சுட்டெண் பொதுவான பருவகால அணுகுமுறையை தொடர்ந்ததுடன் 2019 மார்ச் மாதத்தில் மூன்று மாத உயர் மட்டத்தை அடைந்ததுடன் இக்காலப்பகுதியில் பணிகள் துறையின் விரிவாக்கத்திற்கு கணிசமாக பங்களித்திருந்தது.

வியாபார நடவடிக்கைகளின் விரிவாக்கமானது பிரதானமாக புதுவருட பண்டிகை பருவகாலம் காரணமாக மொத்த விற்பனை, சில்லறை வர்த்தகம், மற்றும் போக்குவரத்து துணைத்துறைகள் போன்றவற்றில் அவதானிக்கப்பட்டிருந்தது. பெருமளவான பதிலளிப்பாளர்கள் பொறுத்திருந்துபார் அணுகுமுறையை பின்பற்றுவதனால் மூன்று மாதங்கள் வியாபார நடவடிக்கைகள் தொடர்பான பணிகள் வழங்குபவர்களின் தோற்றப்பாடு 2019 மார்ச் மாதத்தில் மேலும் மெதுவடைந்திருந்தது. மேலும், சுற்றுலாத்துறையினைப் பொறுத்தமட்டில் தொடர்ந்துவருகின்ற காலப்பகுதி உச்சநிலை குறைந்த காலப்பகுயின் காரணமாக தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம் மற்றும் ஏனைய தனிப்பட்ட பணிகள் துணைத்துறைகள் போன்றவற்றின் வியாபார நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்திருந்தன.

| மாறி | பெப். | மார். | +/- | சாராம்சம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **53.0** | **56.3** | **+** | **அதிகரிப்பு, மெதுவான வீதத்தில்** |
| | | கொ.மு.சு துணைச்சுட்டெண்கள் | | |
| புதிய வியாபாரங்கள் | 55.3 | 57.9 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கைகள் | 54.7 | 63.5 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 51.1 | 51.7 | + | அதிகரிப்பு, உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணிகள் | 43.3 | 48.1 | + | வீழ்ச்சி, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு | 60.5 | 60.1 | - | சாதகம், மெதுவான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

எரிபொருள் விலைகளின் சிறிதளவான அதிகரிப்பின் காரணமாக பணிகள் துறையில் காணப்பட்ட விலைக் கட்டணங்கள் 2019 மார்ச் மாதத்தில் மெதுவான வேகத்தில் அதிகரித்திருந்த அதேவேளை எதிர்பார்க்கப்பட்ட சம்பள அதிகரிப்பு மற்றும் பண்டிகைக்காலங்களில் வழங்கப்படவேண்டிய ஊக்குவிப்பு கொடுப்பனவுகளின் காரணமாக பணிகள் துறையில் எதிர்பார்க்கப்பட்ட ஊழியச் செலவானது உயர்ந்தளவான வீதத்தில் அதிகரித்திருந்தது.

**கொ.மு.சு**
**சுட்டெண் பெறுமதி**
**56.3**

பெப்புரவரி 2019 உடன் ஒப்பிடுகையில் 3.3 சுட்டெண் புள்ளிகள் அதிகரிப்பு

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலக தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலக பணிகள் கொ.மு.சு பெப்புரவரியின் 53.3 இலிருந்து 2019 மார்ச்சில் 53.7 இற்கு முன்னேற்றமடைந்ததுடன் இது உலக பணிகள் துறை வெளியீட்டின் விரிவாக்க வேகத்தில் ஒரு அதிகரிப்பை காட்டியிருந்தது. இது தற்போது 116 தொடர்ச்சியான மாதங்களுக்கான வளர்ச்சியினையும் சமிஞ்சை செய்திருந்தது.

ஜப்பான், சீனா, இந்தியா மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பனவற்றின் பணிகள் கொ.மு.சு 2018 பெப்புரவரியுடன் ஒப்பிடுகையில் 2019 மார்ச் மாதத்தில் முன்னேற்றமடைந்திருந்த அதேவேளை ஐக்கிய இராச்சியத்தின் பணிகள் கொ.மு.சு வீழ்ச்சியை காட்டியிருந்தது.

*மூலம்: மார்க்கிட்[1], ஏப்பிரல் 11, 2019 இல் உள்ளபடியான*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.